RIGHT TO INFORMATION ACT-2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**காமதேனு பல்பொருள் அங்காடி கட்டிட முதல் தளம், 378 அண்ணா சாலை,** தேனாம்பேட்டை, சென்னை–18.
தொலைபேசி 24357580

**வழக்கு எண். 24216 / விசாரணை / 2009**

**விசாரணை நாள் 27 /01/ 2010**

| | |
|---|---|
| முன்னிலை | திரு.ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர்.<br><br>திரு. து.இரா.இராமசாமி, இ.ஆ.ப., (ஓய்வு)<br>மாநில தகவல் ஆணையர் |
| மனுதாரர் | **திரு. ஏ. பழனிவேலுசாமி<br>செயலாளர்<br>மக்கள் நுகர்வோர் சங்கம்<br>13–2–52, பிள்ளையார் கோவில் தெரு<br>பூலாங்குடியிருப்பு – 627 813.<br>செங்கோட்டை தாலுக்கா.<br>திருநெல்வேலி மாவட்டம்.** |
| பொது அதிகார அமைப்பு | பொதுத் தகவல் அலுவலர்,<br>செயல் அலுவலர்<br>பேரூராட்சி அலுவலகம்<br>புதுார் (செ) – 627 813.<br>செங்கோட்டை தாலுக்கா<br>திருநெல்வேலி மாவட்டம். |

* * * * * * * * *

1. மனுதாரர் மற்றும் பொதுத் தகவல் அலுவலர், செயல் அலுவலர், புதுார் பேரூராட்சி, இன்றைய விசாரணைக்கு வந்திருந்தனர்.

2. 11/03/2009 தேதியிட்ட மனுவின் மூலமாக 9 தகவல்கள் கேட்டு மனுதாரர் பொதுத் தகவல் அலுவலருக்கு மனு செய்துள்ளார். அதற்கு, 08/04/2009 அன்று சம்பந்தமில்லாத ஒரு பதிலை மனுதாரருக்கு அனுப்பி, மனுதாரர், உதவி இயக்குநர், பேரூராட்சிகள்,

அவர்களுக்கு மேல் முறையீட்டு மனு அனுப்புவதற்கான சூழ்நிலையை உருவாக்கி உள்ளார். மேல் முறையீட்டு மனுவின் காரணமாக எந்தவிதமான பதிலும் பெறப்படவில்லை என்பதால் 01/08/2009 தேதியிட்ட மற்றொரு மேல் முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்பின்னர், 22/09/2009 தேதியிட்ட இரண்டாவது மேல் முறையீட்டு மனு ஆணையத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

3. மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் அனைத்தும் 23/09/2009 அன்று வழங்கப்பட்டுள்ள நிலையில் தகவல் வழங்குவது குறித்து எந்தவித மேல் நடவடிக்கையும் தேவையில்லை என்றாலும், சற்றேறக்குறைய 5 மாதங்கள் காலதாமதமாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதிலும், கேள்வி எண்.4 மற்றும் 9 ஆகியவற்றிற்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை. **மேற்சொன்ன 2 கேள்விகளுக்கும் அடுத்த 48 மணி நேரத்திற்குள்ளாக மனுதாரருக்கு முழுமையான தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்படுகிறது. கால தாமதமாக தகவல்கள் வழங்கியமைக்கும், கேள்வி எண்.4 மற்றும் 9–க்கு முழுமையான தகவல்கள் வழங்காமைக்கும், பொதுத் தகவல் அலுவலர் மீது ஏன் தகவல் பெறும் உரிமைச் சட்டப் பிரிவு 20 (1)–ன்கீழ் நடவடிக்கை எடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கங்களை இந்த உத்தரவு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அனுப்பி வைக்குமாறு பொதுத் தகவல் அலுவலர் பணிக்கப்படுகிறார். அதே போன்று, 09/06/2009 தேதியிட்ட மேல் முறையீட்டு மனுவைப் பெற்றுக் கொண்ட உதவி இயக்குநர், பேரூராட்சிகள், எந்தவித நடவடிக்கையும் எடுக்காமல், மனுதாரர் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீடு மூலமாகத்தான் தகவலைப் பெற வேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தியதற்கும், முதல் மேல் முறையீட்டு அலுவலர் என்ற முறையில் தனது பணியை செய்யத் தவறியதற்கும், அவர் மீது உரிய நடவடிக்கை எடுப்பதற்கு உயர் அதிகாரிகளுக்கு ஏன் பரிந்துரை செய்யக்கூடாது என்பதற்கான விளக்கத்தினையும் இவ்வாணை கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் இவ்வாணையத்திற்கு அளிக்க உத்தரவிடப்படுகிறது.**

தமிழ்நாடு தகவல் ஆணையம்

ஒப்புதல் அளிக்கப்பட்ட தேதி 01 / 02 /2010
ஆணையத்தின் ஆணைப்படி

(சு.மோகனதாஸ்)
உதவி பதிவாளர்

வழக்கு எண். 24216/09

**திரு. ஏ. பழனிவேலுசாமி**
**செயலாளர்**
**மக்கள் நுகர்வோர் சங்கம்**
**13–2–52, பிள்ளையார் கோவில் தெரு**
**பூலாங்குடியிருப்பு – 627 813.**
**செங்கோட்டை தாலுக்கா.**
**திருநெல்வேலி மாவட்டம்.**

வழக்கு எண். 24216/09

**உதவி இயக்குநர் – பேரூராட்சிகள்**
**மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்**
**திருநெல்வேலி – 9.**

வழக்கு எண். 24216/09

பொதுத் தகவல் அலுவலர்,
செயல் அலுவலர்
பேரூராட்சி அலுவலகம்
புதுார் (செ) – 627 813.
செங்கோட்டை தாலுக்கா
திருநெல்வேலி மாவட்டம்.